**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No.58/2025

**11.03.2026**

## P.W.1- ஜெயம்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 3 மற்றும் 5வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னுடன் பிறந்தவர் மீது 2 சொத்திற்கு வழக்கு போட்டுள்ளேன். அதில் முதல் சொத்து நிலம், மற்றொரு சொத்து வீடு ஆகும். தாவா 1வது இலக்க சொத்து எனது தந்தையின் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரிதான். தாவா 2வது சொத்து எனது தந்தைக்கு பூர்வீக சொத்து என்றால் சரிதான். 2வது பிரதிவாதிக்கும், அவரது மனைவிக்கும் எனது தகப்பனார் தாவா 1வது இலக்க சொத்தை பொறுத்து ஈடுகடன் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படியார்களுக்கு தாவா 1வது சொத்தில் 82 சென்டை பொறுத்து ஒத்திப்பத்திரமும் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ஈடுகடன் பத்திரத்தை எனது தகப்பனார் மீட்டிவிட்டார். மேற்படி ஒத்தியை எனது அப்பா, ராஜா மனைவி சக்கரையம்மாளுக்கு ஒத்தி வைத்துள்ளார். தாவா 1வது இலக்க சொத்தை சக்கரையம்மாள் ஒத்திதாரராக அனுபவம் செய்து வருகிறார். 2வது பிரதிவாதியும், அவரது மனைவியும் தாவா 1வது அயிட்ட சொத்தில் 82 சென்டை ஒத்திதாரராக இன்று வரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்து ஒத்திதாரர் அனுபவத்தில் உள்ளது, கூட்டு அனுபவத்தில் இல்லையென்றால் சரியல்ல. ஒத்தியை மீட்டுவது சம்மந்தமாக பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். எனது வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1/7 பங்குக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா 2வது அயிட்ட சொத்தில் உள்ள வீடு எனது அண்ணன் அனுபவத்தில் இருக்கிறது என்றால் சரியல்ல, எனது அனுபவத்தில் உள்ளது. மேற்படி சொத்தை எனது அப்பா 2008ம் ஆண்டு எனக்கு தானசெட்டில்மென்ட் எழுதிக்கொடுத்தார். மேற்படி பத்திரத்தில் பூர்வீக சொத்து என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பூர்வீக சொத்தை முழுமையாக எனக்கு

எழுதிக்கொடுக்க எனது அப்பாவுக்கு உரிமையில்லை என்றால் பூர்வீக சொத்து நத்தம் புறம்போக்காக மாறியதால் எழுதிக்கொடுத்தார். நான் சுமார் 20 வருடங்களாக திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். மேற்படி தான பத்திரம் எழுதியபோது நான் திருப்பூரில் இருந்தேன். அப்போது எனது பெற்றோர்கள் அங்கு குடியிருந்தார்கள். எனது அப்பா 2012லும், எனது தாயார் 2023ல் இறந்தார். 2023 வரை எனது தாயார் தான் மேற்படி வீட்டில் குடியிருந்தார் என்றால் சரிதான். மேற்படி வீடு கூட்டு அனுபவத்தில் உள்ளதால், 2ம் பிரதிவாதியும் அனுபவத்தில் இருக்கிறார் என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்தவர்கள் அனைவரும் வெளியூரில் குடியிருக்கிறார்கள். 2ம் பிரதிவாதி மட்டும் உள்ளூரில் குடியிருந்து வருகிறார் என்றால் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறார். தாவா வீட்டை தவிர எங்களுக்கு வேறு வீடுகள் கிடையாது என்றால் சரிதான். தாவா வீட்டில் தான் 2ம் பிரதிவாதி குடியிருக்கிறார் என்றாலும் வழக்குரையில் 2ம் பிரதிவாதின் முகவரி தாவா வீட்டின் முகவரிதான் இருக்கிறது என்றாலும் 2ம் பிரதிவாதி மேற்படி வீட்டில் குடியிருப்பது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, வழக்கு முடியும்வரை 2ம் பிரதிவாதி மேற்படி வீட்டில் போக்கூடாது என எழுதி வாங்கினார்கள். தற்போது விஜயராமன் வீட்டில் வாடகைக்கு இருக்கிறார். மேற்படி விஜயராமன் எனது பங்காளி ஆவார். வழக்கிற்காக விஜயராமன் வீட்டில் குடியிருப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பிறந்தது மூலம் மேற்படி வீட்டில் குடியிருக்கிறார், போலீசார் சிவில் வழக்கில் 2ம் பிரதிவாதியை வீட்டை விட்டு வெளியேற்ற முடியாது என்றால் சரியல்ல. எனது தகப்பனாரை குடிபோதையில் ஏமாற்றி 2வது இலக்க சொத்தை எழுதி வாங்கியது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் திருப்பூரில் நல்ல வசதியாக உள்ளேன் என்றால் சரிதான். நான் வருடத்திற்கு ஒருமுறை தான் ஊருக்கு வருவேன் என்றாலும், சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்தபின்பு தான் தானப்பத்திரம் போட்டது தெரியவந்தது என்றால் சரியல்ல. நான் எனது பெற்றோர்களை கவனித்து வந்ததால் எனது பெயருக்கு எனது தந்தை எழுதிக்கொடுத்தார். மேற்படி

வீட்டிற்கு 2ம் பிரதிவாதி வீட்டுவரி ரசீது, மின்கட்டண ரசீது செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. தாவா 2வது இலக்க சொத்தில் எனக்கு முழுமையாக உரிமையில்லை என்றாலும், 1/7 பாகம் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் தாவா சொத்தில் முழு உரிமையை எனக்கு வழங்காது என்றால் சரியல்ல. தாவா 1வது இலக்க சொத்தின் ஒத்தியை மீட்காமல் வழக்கு தாக்கல் செய்ததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.11 14:54:43 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.